திரு. வே. தங்கபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சருடைய பார்வைக்குப் பின்னால் பழுதடைந்த அந்த டீசல் ஜெனரேட்டரை ரிப்பேர் செய்வதற்கும், தினசரி அதில் ஈடுபட்டிருக்கின்ற ஆப்பரேட்டரை பணியில் அமர்த்துவதற்கும் குறிப்பு வந்தாலும் கூட இருக்கின்ற ஜெனரேட்டரைப் பயன்படுத்த முடியாமல் ஆப்பரேட்டர் விடுப்பில் சென்றுவிட்டார்; அவருக்கு மாற்றாக யாரையும் போடாத காரணத்தால் ஜெனரேட்டர் இருந்தும் பயன் இல்லாத சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது. அதைத் தடுக்க அரசு முயற்சி மேற்கொள்ளுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: பேரவைத் தலைவர் அவர்களே, அவ்வாறு செய்தி வரவில்லை. அவ்வாறு செய்திகள் வருமாயின் அது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

I. தகவல் கோரல்—தொடர்ச்சி.

(ஆ) சட்டமன்ற எதிர்க்கட்சியின் பெயர் குறித்து.

திரு. உ. ரா. வரதராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் எங்களுடைய கடமைகளைச் செய்வதற்கு இரண்டு விளக்கங்களைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னுடைய அனுமதி கோரி நீங்கள் விளக்கம் கேட்க வேண்டுமே தவிர அனுமதி கோராமலே விளக்கம் கேட்கக்கூடாது. இப்போது உங்களுக்கு அனுமதி தரப்படுகிறது.

திரு. உ. ரா. வரதராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. நேற்றைய தினம் கூட இந்தச் சட்ட மன்றத்தில், ஒரு பத்திரிகையில் எண்ணிக்கை குறித்து குறிப்பிடப்பட்டது குறித்து பிரச்சினை வந்தது. ஆகவே இந்தச் சட்ட மன்றத்தில் எதிர்க்கட்சியாக இருக்கக்கூடிய கட்சியின் பெயர் அ.இ.அ.தி.மு.க. (ஜெ) என்பதா அல்லது அதில் ஏதேனும் மாற்றம் இருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன். அதனுடைய மொத்த உறுப்பினர் எண்ணிக்கை என்ன என்பதைப் பற்றியும் தங்களுடைய விளக்கத்தை நான் கோருகிறேன்.

1989 பிப்ரவரி 15]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது ஆய்வில் உள்ளது. உடனடியாக அவைக்குத் தெரிவிக்கக்கூடிய செய்தி அல்ல இது. தனிப்பட்ட முறையில் தெரிவிக்க வேண்டிய செய்தி. சட்டங்களை எல்லாம் முழுமையாக ஆராய்ந்த பிறகுதான் முறையாகத் தெரிவிக்க வேண்டும்.

திரு. பி. எச். பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஓர் உறுப்பினர் சம்பந்தப்பட்டது. இதுபற்றி உங்களுக்குக் கடிதம் கொடுத்ததாக நான் பத்திரிகையில் பார்த்தேன். யார் வேண்டுமானாலும், யாருடைய பெயரையும் இணைத்துக் கொள்ளலாம் என்ற நிலை வந்துவிடக்கூடாது என்ற வகையில் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று நான் சொல்கிறேன். சட்ட விளக்கம் தேவைப்படுகிற நேரத்தில் சொல்கிறேன்.

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, யார் வேண்டுமானாலும் கொடுப்பது என்று சொல்லியிருக்கக்கூடாது. உரிமை உள்ளவர்கள்தான் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே அவருடைய கருத்தைச் சொல்ல வேண்டுமேயொழிய யார் வேண்டுமானாலும் கொடுக்கலாமா என்கிற வகையில் பயன்படுத்தும் அந்த வார்த்தை வேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பி. எச். பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பெயரை இணைத்துக் கொடுத்ததே ஒரு உறுப்பினருக்கு அழகல்ல; மரபல்ல. இந்தச் சட்ட மன்றத்தின் மாண்பைக் குறைக்கிறது இது.

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, அவர் எந்தக் கட்சியின் சார்பாக நின்று வெற்றி பெற்றாரோ அந்தக் கட்சியின் தலைவியும் எங்களுடைய கட்சியின் தலைவியும் இணைந்த பிறகுதான் அந்த அறிக்கையைக் கொடுத்திருக்கிறார்கள். எனவே அவருடைய கருத்தைச் சொல்வதில் எனக்குக் கருத்து வேறுபாடு இல்லை.

திரு. பி. எச். பாண்டியன்: பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்பற்றி அவர்களுக்கு நான் சொல்ல வேண்டிய கட்டாயம் இல்லை. அவர்களுக்கும் எனக்கும் சம்பந்தம் கிடையாது. அவர்களுடைய கட்சியால் எதிர்க்கப்பட்டவன் நான் தேர்தலில்.

TRUTH ALONE TRIUMPHS

15 நாட்களில் வேறு யார் வேண்டுமானாலும் வெளியே சேர்ந்து கொள்ளலாம். உள்ளே சேர மாட்டேன். சேராத இடத்தில் சேர மாட்டேன். இன்னும் சொல்லப்போனால் என்னைக் கேட்காமல் இந்த அவைக்கு அந்தக் கடிதத்தைக் கொடுத்ததே தவறு. நேற்றையதினம் நான் இங்கே சொன்னேன். அவைத் தலைவரைப் பார்த்துச் சொன்னேன். இப்படி அனுமதித்தால் எந்த உறுப்பினருடைய பெயரையும் யாரும் இணைத்துக்கொள்ளலாம் என்று நான் சொன்னேன்.

இன்னொன்றையும் நான் சொல்கிறேன். எதிர்க்கட்சித் தலைவராக நீங்கள் பதவி கொடுத்திருக்கிறீர்களே, எந்த அடிப்படையில் கொடுத்திருக்கிறீர்கள் என்பதில் நான் இதுவரையில் கேள்வி கேட்கவில்லை. பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக ஒருவர் நியமிக்கப்பட வேண்டுமானால்—உங்களுடைய ஆட்சி ஏதாவது ஒரு சூழ்நிலையில் கவிழ்வதற்கு . . . . .

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் பதவி கொடுத்ததே முறையல்ல என்று சொல்கிறார்கள். உங்களுடைய நடவடிக்கையே முறையல்ல என்று சொல்கிறார்கள். அதை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா ?

திரு. பி. எச். பாண்டியன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்வதைக் கேட்டுக்கொள்ளுங்கள். எதிர்க்கட்சியை Shadow Cabinet என்று சொல்வார்கள். இது என்ன ஷேடோ கேபினட்டா? 27 பேர். நாளை உங்களுடைய அமைச்சரவை மாறினால் இவர்களால் அமைச்சரவை அமைக்க முடியுமா? பிரிட்டிஷ் பாராளுமன்ற நடைமுறைக்கு இது என்றைக்கோ வந்தது. இதை நான் கிளப்பவில்லை. பாவம் அனுபவித்துப் போகட்டும் என்று விட்டிருந்தேன். (குறுக்கீடுகள்)

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: இப்படிப்பட்ட வார்த்தைகளைச் சட்டமன்றத்தில் அனுமதிப்பது நியாயமா ? (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அருள்கூர்ந்து அனைவரும் அமருமாறு கேட்டுக்கொள்கிறேன். இது தொடர்பாக நான் முறையாகச் சட்டப் பகுதிகளை ஆய்ந்து தக்க முடிவு செய்யும் வரை அருள்கூர்ந்து எந்த உறுப்பினரும் இது குறித்து அவையில் பேச வேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 9-10)

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: தலைவரவர்களே, இப்படிப்பட்ட வார்த்தைகளை நாங்களும் பயன்படுத்தலாமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது இங்கே அவைக்குப் புறம்பான சொற்கள் எதுவும் இடம்பெறவில்லை. அருள்கூர்ந்து அனைவரும் அமரவேண்டும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, நம்முடைய தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளில், 'எதிர்க்கட்சித் தலைவர் என்பது அரசை ஏற்றுள்ள கட்சியைத் தவிர மற்றுள்ள கட்சிகளில் மிக அதிக எண்ணிக்கையை உடையதாகவும் பேரவைக் குறைவெண்ணைவிட அதிக எண்ணிக்கையைக் கொண்டதாகவும் அச்சட்டமன்றக் கட்சியின் தலைவர் எனப் பேரவைத் தலைவரால் அங்கீகரிக்கப்பட்டவரைக் குறிக்கும்' என்றிருக்கிறது. அதைப்போலத்தான் தாங்கள் எதிர்க்கட்சித் தலைவரை அங்கீகரித்து இருக்கிறீர்கள். ஆகவே, இதிலே நம்முடைய மரபின்படி, நம்முடைய சட்ட விதிகளின்படி எந்தவிதமான தவறும் இல்லை என்று கருதுகிறேன்.

திரு. பி. எச். பாண்டியன்: நான் பிரிட்டிஷ் பாராளுமன்ற முறையைத் தெரிவிக்கிறேன். Mother of Parliament, என்று சொல்கிறார்களே அதை நான் தெரிவிக்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அருள்கூர்ந்து அனைவரும் அமர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது இப்போது பேசப்பட வேண்டிய சிக்கலே அல்ல. மாலையில் நான் ஆய்வு செய்த பிறகு, நாளை அவையில் வைக்கப்படுகிறபோது இது குறித்துப் பேசலாம். (குறுக்கீடுகள்)

திரு. பி. எச். பாண்டியன்: சபாநாயகர் அங்கே இருக்கிறார் இங்கே யாரும் இல்லை. (குறுக்கீடுகள்) அதாவது இன்று காலை —தேர்தல் பொறுப்பேற்ற அமைச்சகம் ஏற்றிருக்கிறது என்றும், அவர்களுடைய அமைச்சரவைப் பட்டியலில் யாருக்கு எந்த இலாகா என்பது எனக்குத் தெரியாது இருந்தாலும் ஒரு விளக்கம் நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். * * * * (குறுக்கீடுகள்)

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அருள்கூர்ந்து அமர வேண்டும். இது தொடர்பான எல்லாப் பிரச்சினைகளையும் நிறுத்தி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) இப்போது நான் யாரையும் அனுமதிக்கவில்லை. அருள்கூர்ந்து எல்லோரும் உட்காருங்கள். அடுத்து, "அரசினர் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்தல்".

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: சார், ஒரு ஒழுங்குப் பிரச்சினை. (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது தொடர்பாக பேரவைத் தலைவர் முடிவு சொல்லும்வரை யாரும் கருத்துத் தெரிவிக்க வேண்டாம் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: * * *

திரு. பி. எச். பாண்டியன்: * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என் அனுமதி இல்லாமல் இப்போது குறிப்பிட்ட எதுவும் அவைக் குறிப்பில் இடம் பெறாது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: * * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது தொடர்பான எல்லாக் குறிப்புகளும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: தலைவரவர்களே, நேற்றையதினம் திருச்சி துப்பாக்கிச் சூடு பற்றியும் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அருள்கூர்ந்து ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுக்கப்பட்ட பிறகு அவற்றினுடைய முடிவை நான் ஏற்றுக்கொண்டிருந்தால் முன்மொழியச் சொல்லி வற்புறுத்துவேன். இல்லை என்றால் முடிவை என்னுடைய அறையில் தெரிந்துகொள்ள வேண்டுமே தவிர, அதை இங்கே எழுப்புவது என்று சொன்னால் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை, நேரடியாகப் பேசலாம். அப்படி வாய்ப்பு இருக்கின்ற உறுப்பினர் அருள்கூர்ந்து ஆளுநர் பேருரையின் மீது பேசுகின்றபோது பேசுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.